## 3. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் முதல் கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக* (Panel of Chairmen) *நியமிக்கிறேன்:*

1. *திரு. க. அன்பழகன்*
2. *திரு. நா. இராமகிருஷ்ணன்*
3. *திரு.* S.R. *இராஜா*
4. *திரு. தா. உதயசூரியன்*
5. *திரு. துரை. சந்திரசேகரன்*
6. *முனைவர்* T.R.B. *ராஜா*

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*